இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 12-06-2024

# நீட் - நீடிக்கவே கூடாது

நீட் - தேர்வு ஒரு ஆட்கொல்லி தேர்வு என்பதை அனைவரும் அறிவோம். அது ஒரு மோசடித்தனமான தேர்வு என்பதற்கான ஆதாரங்கள் அடுக்கடுக்காக வரத் தொடங்கி இருக்கிறது. லட்சம் கோடி ரூபாய் புரளும் பயிற்சி மையங்களின் ஆதாயத்துக்காக நடத்தப்படுவதே நீட் தேர்வு என்பது வெட்ட வெளிச்சம் ஆகி இருக்கிறது.

*** ஜூன் 14 ஆம் தேதி தான் நீட் தேர்வு முடிவுகள் வெளியாக வேண்டும். ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியான ஜூன் 4 ஆம் தேதி அவசர அவசரமாக வெளியாகிவிட்டது. அதாவது இதில் நடைபெற்ற மோசடிகள் வெளியில் வரக் கூடாது என்பதால் அரசியல் களேபரங்களுக்கு மத்தியில் நீட் மோசடிகளை மறைக்க ஒரு கும்பல் முயற்சிகள் எடுத்துள்ளது.**

* தேர்வு நடைபெற்ற 4750 மையங்களில், ஒரே பயிற்சி மையத்தைச் சேர்ந்த ஆறு பேர் 720க்கு 720 மதிப்பெண் எடுத்துள்ளார்கள்.

* இந்த ஆறு பேரின் பதிவெண்கள் அடுத்தடுத்து உள்ளன.

* எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்த ஆண்டு 64 பேர் 720 என்ற முழுமையான மதிப்பெண்ணை எடுத்துள்ளார்கள்.

* ஒரு கேள்விக்கு தவறாக மதிப்பெண் அளித்தால் 4 மதிப்பெண்ணும், 1 மைனஸ் மதிப்பெண்ணும் போகும். ஒருவர் 720 - 715 - 710 என்ற அடிப்படையில் மதிப்பெண் பெறலாம். ஆனால் இப்போது 719,718 என்றெல்லாம் தவறான மதிப்பெண்கள் வந்துள்ளது.

* கருணை மதிப்பெண் அளித்ததாகச் சொல்கிறார்கள். எந்த அடிப்படையில் கருணை மதிப்பெண் அளிக்கப்பட்டது என்பது குறித்து தெளிவான விளக்கம் இல்லை.

**“சமீபத்திய நீட் தேர்வு முடிவுகள் தொடர்பாக வெளிவரும் செய்திகள் அத்தேர்வுக்கு எதிரான நமது கொள்கை நிலைப்பாடு நியாயமானது என்பதை உறுதிப்படுத்துகின்றன”** என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், **“இந்த ஆண்டும் நீட் தேர்வு முடிவுகள் வெளியாகி சர்ச்சை கிளம்பி உள்ளது. இனியும் இந்த மோசடித்தனமான தேர்வு முறை அறவே கூடாது. இத்தேர்வு முறையையே முழுமையாக விலக்க வேண்டும். அல்லது நீட் தேர்வு வேண்டாம் என்று சொல்லும் மாநிலங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று இக்கூட்டம் ஒன்றிய அரசைக் கேட்டுக் கொள்கிறது”** என்று தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

நீட் தேர்வை தமிழ்நாடு தொடக்கத்தில் இருந்து எதிர்த்து வருகிறது. ‘தமிழ்நாடு மட்டும்தான் எதிர்க்கிறது’ என்று சொல்லி வந்தார்கள் நீட் ஆதரவாளர்கள். ஆனால் இம்முறை இந்தியாவே எதிர்க்கத் தொடங்கி இருக்கிறது. காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, அகிலேஷ் யாதவ் போன்றவர்களும் எதிர்ப்பை பதிவு செய்து வருகிறார்கள். 2024 மக்களவைக்கான காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில், ‘நீட்’டிலிருந்து விலக்கு வேண்டும் என்று விரும்பும் மாநிலங்களுக்கு, அந்த உரிமை வழங்கப்படும் என்று கூறப்பட்டு இருந்தது.

“நடந்து முடிந்த ‘நீட்’ தேர்வில் மராட்டிய மாணவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். நடந்து முடிந்த தேர்வை ரத்து செய்ய வேண்டும்” என்று மகாராஷ்டிரா மாநில அமைச்சர் அசன் முஷ்ரிப் அறிக்கை வெளியிட்டுள்ளார். இது பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெறும் மாநிலம் ஆகும்.

வட மாநிலத்து இளைஞர்கள் இப்போது சமூக வலைதளங்களில் நீட்டுக்கு எதிராக எழுதத் தொடங்கி இருக்கிறார்கள். பிரதமரின் வாரணாசி தொகுதியில் நீட்டுக்கு மறுதேர்வு கோரி ஊர்வலம் நடந்துள்ளது. ஏனென்றால் அதிகப்படியான மோசடிகள் வட மாநிலங்களில்தான் நடக்கிறது. இங்கே மாணவிகளை அவமானப்படுத்தும் வகையில் சோதனை செய்து தேர்வு அறைகளுக்குள் அனுப்புகிறார்கள். ஆனால் வட மாநிலங்களில் ஆள் மாறாட்டமே நடக்கிறது. இதில் இருந்தே வேற்றுமையை அறிந்து கொள்ளலாம்.

**தேர்வுக்கு முந்தைய நாளே சிலருக்கு கேள்வித் தாளைக் கொடுத்து படிக்க வைத்து - அதற்காக ஒவ்வொருவரிடமும் பல லட்சம் பெற்றதாக ஒரு கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது. தேர்வு அறைக்குள் தாமதமாக வந்தவர்களை அனுமதிப்பதும் இந்த மோசடித்தனத்தின் ஒரு செயல் ஆகும். இப்படி தாமதமாக வந்தவர்களுக்கு கடைசியாக நேர நீட்டிப்புத் தருவதும் இதே மோசடித்தனத்தின் ஒரு அங்கம் ஆகும்.**

**எதையுமே எழுதாமல் வினாத்தாளைக் கொடுத்ததாகவும், அதை தேர்வு அறையில் இருந்த ஆசிரியரே இறுதியாக நிரப்பி சேர்த்துவிட்டதாகவும் ஒரு ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

‘நீட் தேர்வு எத்தகைய தில்லுமுல்லு தேர்வாக நடைபெற்று வருகிறது என்பதற்கு இவை அனைத்தும் ஒருசில உதாரணங்கள்தான். லட்சம் கோடி புரளும் வர்த்தகத் தொழிலுக்கு ஒன்றிய அரசாங்கம் உடந்தையாக இருக்கிறது. அவ்வளவுதான்.

குஜராத் மாநில முதலமைச்சராக மோடி இருந்தபோது நீட் தேர்வை எதிர்த்தார். ஏற்றுக் கொள்ளவில்லை. குஜராத் மாநில அரசு இந்திய மருத்துவக் கவுன்சிலுக்கு ‘நீட்’ தேர்வு எதிர்ப்புக் கடிதம் அனுப்பியது. 2011 ஆகஸ்ட் 11 ஆம் தேதியன்று குஜராத் மாநில சுகாதார அமைச்சர் ஜெயநாராயணன் வியாஸ் எழுதிய கடிதத்தில்,

“எங்கள் மாநிலத்தில் அதிகமான மாணவர்கள் மருத்துவர்களாக வர வேண்டும் என்பது எங்கள் மாநில உரிமையாகும். இந்திய மருத்துவக் கவுன்சில் எங்களை ‘நீட்’டுக்காகத் தயாராகுமாறு கூறியிருந்தது. ஆனால், எங்களால் ‘நீட்’ தேர்வை ஏற்க முடியாது. எங்கள் மாநிலத்திற்கென்று சிறந்த கல்வி அமைப்பு உள்ளது. இதன் அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில் எங்கள் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

நாங்கள் ‘நீட்’ பற்றி ஒரு குழு அமைத்து ஆலோசனை செய்தோம். அந்தக் குழு மாநில அரசின் பாடத் திட்டத்தின்படி படிக்கும் மாணவர்களுக்கு “நீட்” தேர்வு சுமையை ஏற்படுத்தும் என்று அந்தக் குழு தனது அறிக்கையில் கூறியிருக்கிறது. ஆகவே, நாங்கள் ‘நீட்’டை ஏற்றுக் கொள்ள முடியாது.”

என்று அழுத்தம் திருத்தமாக எதிர்ப்பை பதிவு செய்தார். **இந்தக் கடிதத்தையாவது மறுபடி எடுத்து இன்றைய பிரதமர் மோடி படிக்க வேண்டாமா?**



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நேற்று முன்தினம் (10.06.2024) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப்குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், நகர பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மாநகராட்சி அலுவலர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இரா.சிவா தலைமையில்

## இளைஞர் அணி நடத்திய கால்பந்து போட்டி பரிசளிப்பு விழா!

### முன்னாள் துணைவேந்தர் சபாபதிமோகன் பரிசு வழங்கினார்!

புதுச்சேரி, ஜூன் 12- புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா ஐவர் கால்பந்து விளையாட்டுப் போட்டி உப்பளம் இந்திராகாந்தி விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ரோ. நித்திஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில், புதுச்சேரி, கேரளா, தமிழகத்தின் சென்னை, திண்டிவனம், கடலூர், எண்டியூர், கோவளம், சேலம் உள்ளிட்ட இடங்களில் இருந்து 52 அணிகள் பங்கேற்றன.

இதில் முதல் இடத்தை கோரிமேடு பிளே மேக்கர்ஸ் அணியும், புதுச்சேரி மாநில இளைஞரணி இரண்டாம் இடத்தையும், பிளே மேக்கர்ஸ்-3 அணி மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

கால்பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா உப்பளம் இந்திராகாந்தி விளையாட்டு அரங்கில் நடந்தது.

இந்த விழாவிற்கு, மாநில கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமை தாங்கினார்.

மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி வரவேற்று பேசினார்.

விழாவில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், முன்னாள் துணைவேந்தர் முனைவர் சபாபதிமோகன் கலந்து கொண்டு முதல் இடத்தைப் பிடித்த அணிக்கு ரூ. 25 ஆயிரம், இரண்டாம் இடம் பிடித்த அணிக்கு ரூ. 15 ஆயிரம், மூன்றாமிடம் பிடித்த அணிக்கு ரூ. 10 ஆயிரம் மற்றும் கேடயம், சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

கால்பந்து விளையாட்டுப் போட்டியை மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தாமரைக் கண்ணன், ரெமிஎட்வின், தமிழ்ப்பிரியன், உத்தரம், பஜிலுதீன், மாநில அயலக அணி துணை அமைப்பாளர் சிவா, உப்பளம் தொகுதி துணைச் செயலாளர் ஆரோக்கியராஜ், நிர்வாகிகள் ராஜா, ராஜி, ரமேஷ், கல்யாணசுந்தரம், சுரேஷ் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில், மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், ஏ.கே. குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எம். பி.லோகையன், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கோபால், வே.கார்த்திகேயன், மு.பிரபாகரன், ராமசாமி, செல்வராதன், பழநி, டாக்டர் மாயக்கிருஷ்ணன், அமுதாகுமார், நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா.சக்திவேல், செ.நடராஜன், கோ. தியாகராஜன் என்கிற ராஜா, கலியகார்த்திகேயன், சீத்தாராமன், ராஜாராம், ராதாகிருஷ்ணன், அணிகளின் அமைப்பாளர்கள் எஸ்.பி. மணிமாறன், முகம்மது ஹாலிது, வீரய்யன், காயத்ரி ஸ்ரீகாந்த், அருண்குமார், முகிலன், மாநில துணை அமைப்பாளர்கள் காளி, கலிமுல்லா, சந்தோஷ்குமார், எமில், தேவேந்திரன் உருளையன்பேட்டை தொகுதி பொருளாளர் சசிகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### வாக்கு எண்ணிக்கையின்போது பங்குச்சந்தை பெரும் சரிவு!

## ரூ. 20 லட்சம் கோடி இழப்பு! ‘செபி’ அறிக்கை அளிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனு!

புதுடெல்லி, ஜூன் 12 - மக்களவைத் தேர்தல், வாக்கு எண்ணிக்கை நாளன்று பங்குச் சந்தை பெரும் சரிவைச் சந்தித்தது தொடர்பாக ஒன்றிய அரசும், ஒழுங்காற்று வாரியமும் (செபி) அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பில் பா.ஜ.க. அபார வெற்றி பெறும் என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த ஜூன் 3ந் தேதி மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் 2507 புள்ளிகள் உயர்ந்து 76,469 புள்ளிகளுடன் புதிய உச்சத்தை எட்டி நிறை வடைந்தது.

எனினும் மறுநாள் மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின்போது மும்பை பங்குச் சந்தை 4,390 புள்ளிகள் சரிந்து 72,079 புள்ளிகளுடன் நிறைவடைந்தது.

கடந்த 4 ஆண்டுகளில் பங்குச் சந்தை ஒரே நாளில் இந்த அளவுக்கு மோசமாக சரிந்தது இதுவே முதல் முறை இதில் மிகப் பெரிய அளவில் ஊழல் நடைபெற்றதாகவும், இதனால் சில்லறை முதலீட்டாளர்களுக்கு பல லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் விஷால் திவாரி என்ற வழக்குரைஞர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் அவர் தெரிவித்துள்ளதாவது: -

மக்களவைத் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பின் போது பங்குச் சந்தை உச்சத்தைத் தொட்டதாகவும், ஜூன் 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நாளன்று பங்குச் சந்தை பெரும் சரிவைச் சந்தித்ததாகவும் கூறப்படுகிறது.

இதன் மூலம் ரூ.20 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டதாகவும் செய்தி வெளியாகியுள்ளது. இது ஒழுங்காற்று முறை குறித்த கேள்வியை மீண்டும் எழுப்பியுள்ளது. அதுதொடர்பாக உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த போதிலும் எதுவும் மாறவில்லை.

எனவே, ஜூன் 4ஆம் தேதி பங்குச் சந்தை பெரும் சரிவைச் சந்தித்தது தொடர்பாக விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒன்றிய அரசுக்கும், செபிக்கும் உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார்.

சட்ட விரோத பணப் பரிவர்த்தனை, பங்கு விலை மோசடி உள்ளிட்டவற்றில் ஈடுபட்டதாக அதானி குழும நிறுவனங்கள் மீது அமெரிக்க ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் குற்றஞ்சாட்டியது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், முதலீட்டாளர்களைப் பாதுகாக்கவும், பங்குச் சந்தை முறையாகச் செயல்படுவதை உறுதி செய்யவும், ஒழுங்காற்று கட்டமைப்பை வலுப்படுத்தவும் நிபுணர் குழு பரிந்துரைகளை ஆக்கபூர்வமாக பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கும், செபிக்கும் உத்தரவிட்டது.

இந்த உத்தரவைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த நிலவர அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கும், செபிக்கும் உத்தரவிட வேண்டும் என்று தனது மனுவில் விஷால் திவாரி கோரியுள்ளார்.

### நெல்லை மாநகரில்

## கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

### அ.சுப்பிரமணியன் பங்கேற்பு!

நெல்லை, ஜூன் 12 - நெல்லை மாநகர தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாள் முன்னிட்டு தொடர் நிகழ்ச்சியாக பாளை பகுதிச் செயலாளர் அன்டன் செல்லதுரை தலைமையில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம், பகுதி துணை செயலாளர் முகமது கமாலுதீன், மாவட்டப் பிரதிநிதி வல்லநாடு முத்து, வட்டச் செயலாளர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று சமாதானபுரம் இ.பி. அலுவலகம் அருகில் கலைஞர் அவர்கள் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்வில் அலிஃப் மீரான், வேங்கை வெங்கடேஷ், ஸ்டார் முருகன், சிவா, ராபர்ட் செல்லையா, கேபிள் குமரேசன், ஷெட்டி, சித்திக், மகாராஜன், எல்.ஐ.சி பேச்சிமுத்து, செந்தில் குமார், கணேச பெருமாள், சுப்ரித் சுப்பிரமணியன், அந்தோணி ராஜ், சார்லஸ் முத்துராஜ், வினோத், கோபாலகிருஷ்ணன், சங்கர், கிருஷ்ணகுமார், முத்து சுப்பிரமணியன், பால் கட்டளை சரவணன், மை மணி, பாரதி, பத்மா, சௌந்தரம் முத்துராஜ் பிந்து செய்யது, ராஜேஸ்வரி, ஆணி, நர்மதா, சங்கர் கணேஷ் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், தொழிலதிபர் வசந்தம் க.வேலுச்சாமி முன்னிலையில் திருக்கோவிலூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் திருமதி அஞ்சலாட்சி அரசகுமார் இல்ல திருமண வரவேற்பு விழா கனகனந்தல் உதயா ரைஸ் மில் வளாகத்தில் நடைபெற்றது. முன்னதாக தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சரும், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சருமான எ.வ.வேலு, ஒன்றியக் குழு பெருந்தலைவர் இல்லத்திற்கு நேரில் சென்று மணமக்கள் அ.உதயா (எ) உதயகுமார், கோ.காயத்ரி ஆகியோரை வாழ்த்தினார். கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர், உறவினர்கள் உடனுள்ளனர்.